செ.வெ.எண்:37 நாள்:16.07.2021

# குறைவான வாடகையில் வேளாண் இயந்திரங்கள்

தமிழ்நாடு அரசுவேளாண் பெருமக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்திவருகிறது. தற்போதுள்ள வேலையாட்கள் பற்றாக்குறையினை சமாளித்து, வேளாண் பணிகளை குறித்தகாலத்தே செய்துமுடிப்பதற்காக, வேளாண்மைப் பொறியியல் துறைபல்வேறுபுதிய,நவீனவேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கி, விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு வழங்கிவருகிறது.

கரூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்குமிகுந்தபயனைத் தரக்கூடியவேளாண் இயந்திரங்களான இரண்டுமண் தள்ளும் இயந்திரங்கள், ஏழு டிராக்டர்கள் இருப்பில் உள்ளன.

மேலும்,நிலம் சமன் செய்தல், உழவுப்பணிமேற்கொள்ளுதல், சோளத்தட்டை அறுவடை, வைக்கோல் கட்டுதல், வாழைத்தண்டை துகளாக்குதல் உள்ளிட்ட பல்வேறுவேளாண் பணிகளை மேற்கொள்வதற்கும் டிராக்டரால் இயங்கக்கூடிய இயந்திரங்களும் வேளாண் பொறியியல் துறையில் இருப்புவைக்கப்பட்டுள்ளன.

இதுபோன்று, டிராக்டரால் இயங்கக்கூடிய அனைத்துகருவிகளும் டிராக்டருடன் மணிக்குரூ.340/- என்றகுறைந்த வாடகை அடிப்படையில் விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்படுகின்றன. மேலும் மண்தள்ளும் இயந்திரம்(புல்டோசர்) மணிக்குரூ.840/- என்ற அடிப்படையிலும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

மண் அள்ளுவதற்கும், பண்ணைக் குட்டைகள் அமைத்திடவும், புதர்களைஅகற்றவும், சக்கரவகைமண் அள்ளும் இயந்திரங்கள் மணிக்குரூ.660/-க்கும் விவசாயிகளுக்கு வாடகைக்குவழங்கப்படுகின்றன.

எனவே, மேலேகுறிப்பிட்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தேவைப்படும் விவசாயிகள் கீழ்க்கண்டமுகவரியில் உள்ளவேளாண்மைப் பொறியியல் துறையின் உபகோட்ட அலுவலகத்தினை அணுகி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தொடர்புக்கு கீழ்கண்ட அலைபேசி எண்களில் தொடர்புகொள்ளுமாறுகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. உதவிசெயற் பொறியாளர்(வே.பொ) கரூர் அவர்களின் அலைபேசிஎண் 9443567583
2. உதவிசெயற்பொறியாளர்(வே.பொ) குளித்தலைஅவர்களின் அலைபேசிஎண் 9842470358
3. செயற்பொறியாளர்(வே.பொ) கரூர் அவர்களின் அலைபேசிஎண் 9443675201

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்**